**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். : 110/2022**

**அ.சா. : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | நாராயணப்பா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | முனிசாமி |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 50 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் பாகலுரில் குடியிருந்து பூஜை ஜாமான் வியாபாரம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**சாட்சி சட்டப்பிரிவு 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிற்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசு **தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 12.05.2020ம் தேதி காலை 08.30 மணியளவில் பாகலுர் பேருந்து நிலையம் அருகில் உள்ள விநாயகர் கோவில் முன்பு தான் இருந்ததாகவும் பின்னர் பெயர் விலாசம் பாகலுர் தேரிப்பேட்டையைச் சேர்ந்த ராஜப்பா மகன்

சரத்குமார் என்பவர் பாகலுர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டு நாட்டில் கொரானா வைரஸ் பரவல் சம்பந்தமாக தமிழக அரசு எடுத்த தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விமர்சித்து அந்த வழியாக சென்றுகொண்டிருந்த பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் தமிழக அரசுக்கு எதிராக ரோடில் செல்லும் வாகனங்களை அடித்து நொறுக்கி தீ வைத்து கொளுத்துவேன் என்று சொல்லி தமிழக அரசுக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையிலும பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததை போலிசார் மடக்கிப்பிடித்து விசாரித்து கைது செய்ததாகவும் போலிசார் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**எதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு<br>கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு,<br>சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி<br>சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென<br>ஒப்புக்கொண்டார்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1<br>ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஓசூர்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 110/2022

1. **அ.சா. :**2

| | | |
|---|---|---|
| பெயர் | : | காந்தராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | :ப | வட்டேலியப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 29 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 31.01.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தேவீரப்பள்ளியில் குடியிருந்து நான் பார்மசியில் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை. காவல் துறையினர் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி சட்டப்பிரிவு 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிற்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசு **தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 12.05.2020ம் தேதி காலை 10.30 மணியளவில் பாகலூர் பேருந்து

நிலையம் அருகில் உள்ள விநாயகர் கோவில் முன்பு இருந்ததாகவும் பின்னர் பாகலுர் தேர்ப்பேட்டையைச் சேர்ந்த ராஜப்பா மகன் சரத்குமார் என்பவர் பாகலுர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டு நாட்டில் கொரானா வைரஸ் பரவல் சம்பந்தமாக தமிழக அரசு எடுத்த தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விமர்சித்து அந்த வழியாக சென்றுகொண்டிருந்த பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு செய்யும் வகையில் தமிழக அரசுக்கு எதிராக ரோடில் செல்லும் வாகனங்களை அடித்து நொறுக்கி தீ வைத்து கொளுத்துவேன் என்று சொல்லி தமிழக அரசுக்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையிலும பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததை போலிசார் மடக்கிப்பிடித்து விசாரித்து கைது செய்ததாகவும் போலிசார் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிக்கு சாதகமாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. ஷஎதிரி தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு,
சரியென ஒப்புக்கொண்டார்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.